மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

(அ) பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி ஆயுள் தண்டனைக் கைதிகள் 419 பேர் விடுதலை செய்யப்படுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு ஒன்றினை பேரவையில் அறிவிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இப்போது அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்..

முற்பகல் 11-20

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுக் காலமாக சுதந்திர நாள் போன்ற முக்கியமான நாட்களிலும், முக்கியத் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களிலும், அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டியும் சிறைக் கைதிகள், ஒரு குறிப்பிட்ட காலத் தண்டனையை அனுபவித்தவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன்படி, 1968-ல் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அடுத்து, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியில், 1977-ல் அறிஞர் அண்ணா பிறந்த நாளில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நூற்றாண்டு விழாவில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர், 1989-ல், கழக ஆட்சியில் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். 1990-ல், கழக ஆட்சியில், டாக்டர் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களையொட்டி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு 1992, 1993, 1994 ஆகிய மூன்று ஆண்டுகளில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் பிறந்த நாளில் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்கான உத்தரவுகளை அவரே இட்டிருக்கிறார். நான் பிறந்த நாளிலோ, அருமை

நண்பர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளிலோ கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. காரணம், நாங்கள் ஜெயலலிதா அளவிற்குப் பெரிய தலைவர்கள் இல்லை.

இப்படி, விடுதலை செய்வதற்கான சில நிபந்தனைகள் என்னவென்றால், (1) சிறையில் இருந்த காலத்தில் அவர்களது பொது நடத்தை திருப்திகரமாக இருந்திருக்க வேண்டும். (2) அவர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு அவர்களது உயிருக்கு எந்த ஆபத்தும் வெளியில் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும். (3) விடுதலை செய்யப்படுபவர்கள்—அரசாணை எண் 1762, உள் துறை, நாள் 20-7-1987-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடுங்குற்றங்களான கற்பழிப்பு, கொள்ளை, கொடூரமான குற்றங்கள், ஏமாற்று வேலை, கள்ளக்கடத்தல், பொருளாதாரக் குற்றங்கள், பதுக்கல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், விபச்சாரம், மருந்துச் சட்டம் மற்றும் உணவுக் கலப்படச் சட்டங்களின் கீழ் குற்றம் புரிதல் முதலியவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, 15-9-1996 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 88-வது பிறந்த நாளையொட்டி, அந்தத் தேதியில் 10 ஆண்டுகள் தண்டனையை அனுபவித்து முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுவிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. இன்று செய்யப்படும் இந்த அறிவிப்பின் மூலமாக 419 சிறைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. மேலும், உங்களுக்குத் தெரியாதது அல்ல. விதி 110-ன் கீழ் அறிக்கை வைத்த பிறகு அதன் மேல் எந்த விவாதமும் இருக்கக் கூடாது. உட்காருங்கள். இன்னொன்றும் இருக்கிறது. உட்காருங்கள்.

(ஆ) சென்னை பி. அண்டு சி. ஆலை நவம்பர் 1 ஆம் தேதி திறக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் பி. அண்டு சி. ஆலை பிரச்சினை குறித்து அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டிருக்கிறார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.